2. தகவல் கோரல்

(அ) காவேரி-டெல்டாப் பகுதிகளில் குறுவை நெல் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.சி. மணி, சொல்லுங்கள்.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 29 ஆம் தேதி, காவேரி-டெல்டா பகுதிகளில் குறுவை விவசாயம் செய்யப்பட்டு, அறுவடை நடந்துகொண்டிருக்கிறது என்றும், அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினைத் தொடங்குமா, சென்ற ஆண்டு கொடுத்த ஊக்கத் தொகையைவிட அதிகமாகத் தருகின்ற நிலை ஏதாவது இருக்கின்றதா என்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 5 ஆம் தேதி நடைபெறுகிற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுத்து அறிவிக்கின்றேன் என்று தெரிவித்தார்கள். அந்தக் கூட்டம் நடைபெற்றதா என்று தெரியவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவைக் கூட்டம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. கோ.சி. மணி: அது பற்றிய விவரத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இல்லாவிட்டாலும் அவை முன்னவர் அவர்கள் தெரிவிப்பாரா அல்லது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் தேதி அதுகுறித்து முடிவு எடுக்கப்படவுள்ளது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ.சி. மணி அவர்கள்.

திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொள்முதல் தள்ளிக்கொண்டே போகிறது. அதற்கு விரைவாக ஏதாவது நடவடிக்கை எடுத்து, இன்றோ அல்லது நாளைக்கோ நெல்லை வாங்குகின்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா, அந்த விவசாயிகளுடைய நஷ்டத்தைத் தீர்ப்பதற்கு வழிவகை காணப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு முக்கிய பிரச்சினை, பணப்பிரச்சினை. ஏற்கெனவே சம்பா கொள்முதலுக்கு ரிசர்வ் வங்கி மூலமாக 880 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வாங்கும் அளவு நிர்ணயிக்கப்பட்டு, முழுப்பணமும் வாங்கப்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் 350 கோடி ரூபாய்தான் ரிசர்வ் வங்கி அனுமதியளித்திருந்தது. அதற்கு மேலாக, 530 கோடி ரூபாய் மேலும் கடன்பெற்று அந்தப் பணத்தில் 500 கோடி ரூபாயை உடனடியாகத் திருப்பிச் செலுத்தினால்தான் தற்போது குறுவை கொள்முதலுக்குப் பணம் தரமுடியும் என்று ரிசர்வ் வங்கி கூறியிருக்கிறது. இதுகுறித்து நிதிச் செயலாளர்கூட பம்பாய்க்குச் சென்று வந்தார். ரிசர்வ் வங்கியினுடைய மேல்நிலை அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள். மீண்டும், தற்போது ஸ்டேட் வங்கியை நாங்கள் அணுகியிருக்கிறோம். ஸ்டேட் வங்கியை அணுகி, ஸ்டேட் வங்கி மூலமாக term loan கேட்டிருக்கிறோம். ஸ்டேட் பாங்க் மூலமாக 500 கோடி ரூபாய் term loan வாங்கி, அதை ரிசர்வ் வங்கிக்கு நாம் தரவேண்டிய பாக்கி 500 கோடி ரூபாய் தந்தால்தான், குறுவை கொள்முதலுக்குப் பணத்தைத் தர முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் தற்போது உண்மையிலேயே நடைமுறையிலே இருக்கின்ற பண நெருக்கடியை ஒட்டிய நிலை. இதைச் சீர்செய்யத்தான் தற்போது ரிசர்வ் வங்கியை அணுகி, ஸ்டேட் பாங்க் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சில தினங்களில் அது முடிந்துவிடும் என்று நம்புகிறோம். அந்த நிதிநிலை சீர்செய்யப்பட்டவுடன் குறுவை கொள்முதல் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் இல்லாத காரணத்தால், நாம் கொள்முதல் செய்யவில்லை என்ற ஒரு நிலை இருந்தாலும் இப்போது அதை விவசாயிகளிடமிருந்து யாரும் வாங்குவதற்குத் தயாராக இல்லை. தாளடி சம்பா சாகுபடி செய்ய இயலாது. குறுவை நெல்லைக் கொள்முதல் செய்யாவிட்டால் விவசாயம் செய்வதற்கு நிச்சயமாக அது இடம் தராது. அவற்றை உடனுக்குடன் விற்றாக வேண்டும். அதற்கு ஒரு நடவடிக்கையை தற்காலிகமாகவாவது, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, மத்திய வங்கிகள் மூலமோ அல்லது மாநில வங்கிகள் மூலமோ, ஏதாவது தற்காலிகமாகக் கடன் பெற்று அதை வாங்குகிற சூழ்நிலையை இந்த 10 ஆம் தேதிக்குள்ளாவது அரசு செய்து தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2001 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்க வேண்டிய இடத்திலெல்லாம் ஏற்கெனவே பணத்தை சென்ற அரசு வாங்கிவிட்டது. கடனைத் திருப்பிக் கொடுக்காத நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மையான நிலை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எந்த அளவுக்கு ஒரு பெருமுயற்சி என்றால், நிதிச் செயலாளர் அவர்களை நாங்கள் ரிசர்வ் வங்கிக்கு, பாம்பேக்கு அனுப்பி, வெறும் 500 கோடி ரூபாய்க்கு அரசு திண்டாடக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. ஏற்கெனவே முந்தைய ஆட்சிக் காலத்தில் என்பதை அவை புரிந்துகொள்ள வேண்டும். இது உண்மையான நிலை என்பதை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா வகைகளிலும் முயற்சி எடுத்துவிட்டு, முடியாத சூழ்நிலையிலேதான் ஸ்டேட் பாங்கிடம் சென்று term loan என்ற கடனை வாங்கி, அதை ரிசர்வ் வங்கிக்குச் செலுத்த வேண்டிய பணத்தைத் தந்தால்தான் குறுவைக்குப் பணம் தர முடியும் என்று ரிசர்வ் வங்கி கூறிவிட்டது. சென்ற ஆண்டு அதற்கு முன்னர் எல்லாம் இந்தக் கொள்முதலைப் பொறுத்தவரைக்கும் ஒன்று, 1 ஆம் தேதி முதல் கொள்முதல் தொடங்கப்படுகிறது; அல்லது, 15, 16 ஆம் தேதிக்கு மேல் கொள்முதல் தொடங்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாதவகையில் எத்தகைய பண நெருக்கடிப் பிரச்சினைகள் சென்ற ஆட்சியில் உருவாக்கப்பட்டுவிட்டாலும்கூட, உணர்வுகளைக் காப்பதில் புரட்சித் தலைவி அவர்கள் அரசு முக்கிய அக்கறையோடு இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்த்து விடுவோம் என்பதை அவைக்கு நான் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. மணி அவர்களே சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் அவர்கள் பணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். வெறுங் கையால் எப்படி முழம் போடமுடியும்? பணம் வரட்டும். (குறுக்கீடுகள்)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். எல்லோரும் உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக செப்டம்பர் மாதம் முதல் தேதியில் மத்திய அரசு நெல்லுக்கு விலை நிர்ணயித்து, அது இப்போது வழக்கமாக இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே பிரச்சினைதானா?

திரு. ஜி. பழனிசாமி: அதே பிரச்சினைதான். ஆனால், இதுவரையில் மத்திய அரசு விலை நிர்ணயிக்கவில்லை. அதிலே ஒரு தடுமாற்றமான நிலைமை இருக்கிறது. மத்திய அரசு விலை நிர்ணயிப்பதற்கு மாநில அரசு கேட்கவில்லை. அதோடு மட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அதே நிலைதான் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற பிரச்சினை. நெல்லைக் கொள்முதல் செய்துகூட, பின்னர்கூட நாம் பணம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, இதைக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்து, அமைச்சர் விளக்கம் அளிக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

அடுத்து, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஈரோடு அரசு மருத்துவமனைகளில் அதிகமாக உள்ள ரிசர்வ் மருத்துவர்களை, மருத்துவர்கள் குறைவாக உள்ள மருத்துவமனைகளுக்கு மாற்றுவது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக....

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

VAYMAIYE VELLUM TRUTH ALONE TRIUMPHS